[9th November 1966

கனம் சபாநாயகர்: ஸர்வே பண்ணி, எவ்வளவு தான் வைக்கலாம் என்பதற்கான விவரங்களை முன்கூட்டியே அரசாங்கம் சேகரித்து வைத்திருக்கிறதா என்று கனம் அங்கத்தினர் கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன்: திருத்துறைப்பூண்டி, நாகைப்பட்டினம், ஓரத்தநாடு ஆகிய பகுதிகளில்தான் வைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

விடுதி கமிட்டி

*553 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகா, மன்னார்குடி அரசினர் மாணவிகள் விடுதிக்கு விடுதி கமிட்டி அமைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் பற்றிய விபரம் மேஜை மீது வைக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள்—

அலுவல் முறையில் உறுப்பினர்கள்.

1. சகோதரி மேரி என்வாயிலேட், தலைமை ஆசிரியை, புனிதர் ஜோஸப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

2. பள்ளித்துணை இன்ஸ்பெக்டர், மன்னார்குடி.

அரசுப் பணியாளர் அல்லாதார்

1. ஸ்ரீமதி ஹம்சவல்லி, தலைவி, மாதர் சங்கம், அரவத்தூர்.

2. ஸ்ரீ அம்பிகாபதி, எம்.எல்.ஏ., எக்கல், இடுபவனம் அஞ்சல் திருத்துறைப்பூண்டி தாலுகா.

3. ஸ்ரீ பரமசிவ செம்மதார், காண்ட்ராக்டர், மன்னார்குடி.

அரிசன கிறிஸ்துவர்கள்

*554 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்து ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகள் யாவும் கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கும் வழங்கும் வகையில் சட்டம் செய்யும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு எந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டன என்பதைக் கனம் உறுப்பினர் குறிப்பிடவில்லை.